# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2022
## அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## The Tamil Competition 2022
## The Australian Society of Graduate Tamils (ASoGT) Inc.

## விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்

1) விசேட முன்னேற்பாடற்ற (impromptu) பேச்சுப் போட்டியில் போட்டியாளர்களுக்குக் கொடுக்கப்படும் தலைப்பில் தாமாகவே சிந்தித்துப் பேச்சு ஒன்றைத் தயார் செய்து பேச வேண்டும்.

2) நீஙககள் பேசும் போது உதவிக் குறிப்புக்களைப் (palm card) பார்த்துப் பேசலாம், இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படமாட்டாது.

3) பேச்சின் தலைப்பு போட்டி ஆரம்பிப்பதற்குப் 20 நிமிடங்களிற்கு முன் கொடுக்கப்படும்.

4) விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டி மாநில மட்டத்தில் நடாத்தப்படும்.

5) மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு பேச்சுப் போட்டிகளிற் பங்கு பற்றும் போட்டியாளர்கள் விசேட முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டியிற் பங்குபற்ற முடியாது.

6) போட்டி நடைபெறும் வேளையிற் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள் (பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அப்படிச் செய்தாற் புள்ளிகள் குறைக்கப்படும்.

7) முன்னேற்பாடற்ற பேச்சுப் போட்டிக்கு மதிப்பீடு செய்யப்படும் அம்சங்கள்: **முன்வைக்கப்படும் கருத்துக்கள்** (30%), **உச்சரிப்பு** (20%), **பொருளுணர்ந்து பேசுதல்** (25%), **சபைமரபும் ஆதிக்கமும்** (25%) என்ற விகிதாசார அடிப்படையிலேயே பேச்சுக்கள் கணிக்கப்படும்.

**8) முன்வைக்கப்படும் கருத்துக்கள்** (30%)

- ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட தலைப்பிற்குக் கொடுக்கும் விளக்கமும் அதன் தராதரமும்.
- தலைப்பிற்கு ஆதரவாக முன்வைக்கும் கருத்துக்களும், அவற்றின் தராதரமும்.
- போட்டியாளர்களின் சுயமான சிந்தனைகள்

**9) உச்சரிப்புத் திறன்**(20 %)

- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகளையும் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்து அச்சொற்களின் சரியான உச்சரிப்போடு பேசவேண்டும்.
- தூயதமிழ் உச்சரிப்பு கவனிக்கப்படும்.
- சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் மற்றும் வார்த்தைகளின் இறுதியில் வரும் சொற்கள்) கவனிக்கப்படும்.

10) **பொருள் உணர்ந்து பேசும் திறன்** (25%),

- பொருத்தமான முறையிற் சொற்களைப் பிரித்துப் பேசவேண்டும்.
- ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
- வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களைத் தகுந்தவாறு கையாளுதல்
  (உ+ ம்:"அது எங்கே ? " என்பதை "அது எங்கே" போலப் பேசுதல் ஆகாது)

- வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி: (மிகையான உணர்ச்சிகளை வெளிப்படுத்துதல், முரணான சைகைகளைப் பயன்படுத்துதல், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் பிடித்தல் போன்றவற்றைத் தவிர்ப்பது நன்று.)

11) **சபை மரபு - ஆதிக்கத்திறன்**(25%)

- மேடைக்குச் செல்லும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையிலே தம்மை வைத்திருத்தல்.(நெளிதல், வளைதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும்இ தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சைஆரம்பித்தல். உங்களுக்குத் தரப்பட்ட பேச்சில் உள்ள வசனங்களை மட்டுமே பாவித்தல் வேண்டும். மிகைப்படுத்தப்பட்ட வேறு வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
- பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல் வேண்டும்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
- முக பாவனை: பேச்சின் பொருளை உணர்ந்து, அனுபவித்து, இரசித்துப் பேசும் பாங்கு.
- தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல். (மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.)

12) எல்லா விபரங்களுக்கும் போட்டிகளுக்குரிய முழுமையான விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழே தரப்பட்ட வழிகளிற் தொடர்பு கொள்ளவும்.

13) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சைச் சபையின் தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்.**